உதவும் உள்ளங்கள்

[சிறுவர் இலக்கியம்]



கவிஞர் மண்டூர் தேசிகன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவும் உள்ளங்கள்

[சிறுவர் இலக்கியம்]

Donated by Save the Children in Sri Lanka

கவிஞர் மண்டூர் தேசிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சுனாமி சிறுவர் நூல் வெளியீட்டுச் செயற்திட்டம் 2005/2006 அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இது நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

UTHAVUM ULLANKAL

By : Mr. S. Gnanathesigan

Mandur Thesigan

First Published - 2006

Page : 60

Price : 150.00

Printed at:
Golden Offset
Batticaloa Road, Kalmunai.

ISBN : 955 - 99505 - 2 - 5

Donated by Save the Children in Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

இயற்கையின் கோரச்சீற்றத்தினால் ஏற்பட்ட கடற்கோள் பேரழிவினால் உயிரிழந்த வாழ்விழந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்குக் காணிக்கையாக இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

கடற்கோள் அனர்த்தத்தினால் கூடுதலான உயிரிழப்புக்கு ஆளானவர்கள் சிறுவர்களாகும். எஞ்சியுள்ள சிறுவர்களில் அநேகமானோர் உள ரீதியிலான தாக்கங்களுக்கு ஆளாகியுள்ளனர். இத்தகைய சிறுவர்களை ஆற்றுப்படுத்தி அவர்களது மனநிலையை அபிவிருத்தி செய்து வாழ்வில் நம்பிக்கையையும், பிடிப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது ஒவ்வொருவரதும் தலையாய கடமையுமாகும். இந்தப் பாரிய முயற்சிக்கு என்னால் இயன்ற ஒரு சிறு பங்களிப்பாக இந்த நூலை இயற்றி வழங்குகின்றேன்.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கடற்கோள் அனர்த்த சிறுவர் நூல் வெளியீட்டு உதவித்திட்டத்தின் கீழ் இந்த நூல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி செ. யோகராசா (மொழித்துறை கிழக்கு பல்கலைக்கழகம்) அவர்களுக்கும், கதைகளுக்குப் பொருத்தமான படங்களை வரைந்து தந்த சு. தெய்வேந்திரன் (ஆசிரியர்) அவர்களுக்கும், இந்நூல் வெளியீட்டோடு தொடர்புடைய அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்கி விடைபெறுகின்றேன்.

நன்றி - வணக்கம்.

கவிஞர் மண்டூர்த்தேசிகன்
2ம் பிரிவு,
மண்டூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

தமிழில், குறிப்பாக இலங்கையில் வெளிவருகின்ற சிறுவர் இலக்கியப் படைப்புகளை மனச்சலிப்புடன் பார்ப்பதே எனது வழக்கம். அதற்கான காரணம் யாதென்பது பற்றி பரந்த வாசிப்பனுபவமுடைய வாசகர்கள் அறிந்திருப்பர். அதற்கு மாறாக, "உதவும் உள்ளங்கள்" என்ற இத்தொகுப்பு ஏனைய சிறுவர் கதைத் தொகுப்புகளிலிருந்து வேறுபட்டமைந்து சற்று மன ஆறுதல் தருவதுண்மை; அத்தகைய வேறுபாடுகளுள் தலையாயது, இத்தொகுப்பிலுள்ள கதைகளுட் சில சமகாலச் சம்பவமொன்றுடன் தொடர்புபட்டிருப்பதாகும்;

சமகாலச் சம்பவமென்று நான் கருதுவது 2004, டிசம்பர் 26ல் தென்னாசிய நாடுகள் சிலவற்றிலேற்பட்ட இயற்கை அனர்த்தமாகிய சுனாமி என்கின்ற ஊழிக் கூத்துப்பற்றியே. இத்தகைய பேரழிவினால் காவுகொள்ளப்பட்டவர்களுள் கணிசமானோர் பெண்களும் சிறுவர்களுமே. பேரழிவிலே தப்பிய சிறுவர்களுள் அநேகர் உளவியல் ரீதியில் மனநிலை பாதிப்புற்றுக் காணப்படுகின்றனர். கடற்கரை மணல் மீது களிப்புடன் வீடு கட்டி விளையாடிய சிறுவர்கள் பலர் "கடல்" என்றவுடன் இன்று அச்சம் கொள்கின்றனர். இவர்களது அச்சத்தைப்போக்கி கடற்கரையில் விளையாட இவர்களை மீண்டும் அழைத்துச் செல்வது அவசியமானது. இவ்விதத்தில் இத்தொகுப்பிள்ள கதைகளிலே சில, சுனாமியுடன் தொடர்புபட்டனவாய் அமைந்து கடல் மீது கொண்ட பயத்தைக் குறைப்பதற்குப் பயன்படக் கூடியனவாயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்று, "சுனாமி" இயற்கை அனர்த்தம் என்று அறியாத சிலர் அது பற்றிய மூடநம்பிக்கை சார்ந்த பழைய, புதிய "கதைகள்" சிலவற்றை உருவாக்கியுமுள்ளனர். (அத்தகைய "சுனாமிக் கதைகள்") சிலவற்றை தமிழ் சிறப்புக்கற்கை நெறிகற்ற கிழக்கு பல்கலைக்கழக மாணவி செல்வி. அ. டிலக்ஸ்மி தொகுத்திருக்கின்றார்) அவ்வாறான மூட நம்பிக்கைகள் சிலவற்றிற்கு விஞ்ஞான ரீதியில் விளக்கமளிக்கின்ற படைப்புக்கள் சிலவும் இத்தொகுப்பிலிடம் பெற்றுள்ளன.

இன்றைய சூழலில் அவசியம் தேவைப்படுகின்ற - இன்று அருகிப் போயுள்ள - மனித விழுமியங்களுள் சில, குறிப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பிறருக்கு உதவி செய்தல்” என்பது இத்தொகுப்பில் உள்ள அனைத்துக் கதைகளினதும் அடிநாதமாக ஒலிப்பதும் பாராட்டிற்குரியது.

மேற்கூறிய விதங்களிலே இத்தொகுப்பு,
“காலத்திற்கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்....”
என்ற பாரதியாரின் வாக்கிற்குப் பொருத்தமானதொரு எடுத்துக் காட்டாகவுள்ளதென்பது மிகையன்று.

தவிர சிறுவர்கள் நன்கு விரும்புகின்ற மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், பூக்கள் முதலியன இக்கதைகள் பலவற்றிலும் இடம்பெற்று சிறுவர்களோடு கலந்துறவாடி அவர்களது உள்ளங்களை எளிதாக ஈர்த்துக் கொள்வனவாகவுள்ளன. அவைகள் ஒவ்வோர் சந்தர்ப்பங்களில் பிறருக்கு உதவி செய்வது வெகு இயல்பானதாக அமைந்திருப்பதும் சிறுவர்களும் அத்தகை நற்செயல்களுக்கு எளிதாக தூண்டப்படக் கூடியவர்களாகவிருப்பதும் நூலாசிரியரது எழுத்தாற்றலின் சிறப்பிற்கு சான்று பகர்கின்றன.

அனைத்துக் கதைகளும் பிறரது தொகுப்புக்கள் போன்று ஒரேவிதமான பாணியிலமையாது வெவ்வேறுபட்டமைந்து புதிய, புதிய சுவையினை தருகின்றமை இத்தொகுப்பின் பிறிதொரு சிறப்பாகின்றது.

சுருங்கக்கூறின், பயங்கர இரவுகளும் மண்டை ஓடுகளும் மலிந்துள்ள இன்றைய சிறுவர் கதையுலகில் மேற்கூறிய விதங்களிலே இத்தொகுப்பு வித்தியாசப்பட்டுள்ளமை கண்கூடு. அதேவேளையில் அடுத்துவரும் தொகுப்புகளில் ஆசிரியரது மொழிநடை மென்மேலும் செழுமையும் செறிவும் இனிமையும் எளிமையும் பெறவேண்டும் என்பதும் பயன்மிகு வழிகளில் கற்பனை செழிக்க வேண்டுமென்பதும் ஆரோக்கிய நோக்கிலான எனது எதிர்பார்ப்பாகும்.

நல்லாசிகளுடன்,

கலாநிதி. செ. யோகராசா
மொழித்துறை கிழக்கு பல்கலைக்கழகம்
21 - 01 - 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நன்றியுள்ள வண்ணத்துப் பூச்சிகள்

அன்று வெயில் மிகவும் கூடுதலாக இருந்தது. எல்லோருக்கும் தாகம். சிறிது நீர் அருந்தினால் தாகம் தீரும். ஒரு சொட்டு நீரும் பக்கத்தில் இல்லை. வெகு தூரத்திற்கப்பால்தான் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது.

வண்ணத்துப் பூச்சியொன்றுக்கு மிகவும் தாகமாக இருந்தது. எனினும் அதற்கு அங்கு பறந்து சென்று நீர் அருந்த முடியவில்லை. அதற்கு மிகவும் களைப்பாக இருந்தது.

அது பூக்களிடம் சென்றது. சிறிது தேன் தருமாறு கேட்டது. ரோஜாப் பூ கொஞ்சம் தேன் கொடுத்தது. மல்லிகைப் பூவும், செவ்வரத்தம் பூவும் தேன் கொடுத்தன. வண்ணத்துப் பூச்சியின் தாகம் அடங்கியது. அது பூக்களுக்கு நன்றி கூறியது.

பூக்கள் தலையை அசைத்துச் சிரித்தன. வண்ணத்துப் பூச்சி பறந்து சென்றது. அதன் பின்பு பல நாட்கள் சென்றன. ஆனால், மழை பெய்யவே-யில்லை, பயிர்கள் எல்லாம் வாடின. பூக்களும் வாடிக்கிடந்தன. வண்ணத்துப் பூச்சி பறந்து வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தது, அதற்குத் துக்கமாக இருந்தது. தனது சிறகை அசைத்து காற்றை வீசியது. பூக்களுக்கு அது சுகமாக இருந்தது. பூக்கள் வண்ணத்துப் பூச்சிக்கு நன்றி கூறின.

வண்ணத்துப்பூச்சி மழை பெய்ய வேண்டு-மென்று கடவுளை வணங்கியது. தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களான வண்ணத்துப்பூச்சிகளை எல்லாம் அது அழைத்து வந்தது. எல்லோரும் சேர்ந்து கடவுளை வணங்கினர். உடனே மழை பெய்தது. மண் குளிர்ச்சியாக மாறியது. இப்போது வெப்பம் இல்லை.

பயிர்கள் மகிழ்ந்தன. புதிய தளிர்கள் வெளியே வந்தன. புதிய பூக்களும் பூத்துச் சிரித்தன. அனைவரும் மகிழ்ந்தனர். வண்ணத்துப் பூச்சிகளுக்கு எல்லாப் பயிர்களும் நன்றி கூறின.

பூக்கள் வண்ணத்துப் பூச்சிகளையெல்லாம் விருந்துக்கு வருமாறு அழைத்தன. வண்ணத்துப் பூச்சிகளுக்கு நிறையத் தேனைக் கொடுத்தன.

ஒவ்வொரு நாளும் தாம் படைக்கும் தேன் விருந்தை உண்டு பசியாற வருமாறு பூக்கள் கூறின. "மிக்க மகிழ்ச்சி, பூக்களுக்கு எமது நன்றிகள்" என்று வண்ணத்துப் பூச்சிகள் கூறின.

அன்று முதல் இன்றுவரை பூக்கள் வீட்டில் வண்ணத்துப்பூச்சிகளுக்கு தினமும் கொண்டாட்டம்-தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. காகத்தின் கூட்டில் குயில் குஞ்சு

காகம் கடுமையாக உழைத்து ஒரு கூட்டைக் கட்டி முடித்தது. உயர்ந்த தென்னை மரத்தில் அந்தக் கூடு இருந்தது. காகம் அந்தக்கூட்டில் நான்கு முட்டைகளை இட்டது. மிகவும் பொறுமையுடன் முட்டைகளை அது அடைகாத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் காகம் இரை தேடச்சென்றதன் பின் குயில் ஒன்று மிக வேகமாக பறந்துவந்தது. கூட்டில் காகத்தின் முட்டைகளைக் கண்டது. ஒரு முட்டையைக் கீழே தள்ளிவிட்டது. காகத்தின் கூட்டில் குயில் தனது முட்டையை இட்டது. பின்பு அது பறந்து சென்று விட்டது.

காகம் திரும்பிவந்து கூட்டைப் பார்த்தது. முட்டைகள் கலைந்து கிடந்தன. காகம் கீழே பார்த்தது. தனது முட்டையொன்று உடைந்து கிடந்தது. முட்டைகளை எண்ணிப்பார்த்து ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, முட்டைகள் எல்லாம் சரியாக இருந்தன. காகத்திற்கு எதுவும் புரியவில்லை. அது மீண்டும் முட்டைகளை அடைகாத்தது.

அடுத்த நாளும் காகம் இரைதேடச் சென்று திரும்பியது. அன்றும் இதேமாதிரித்தான் எல்லாம் நடந்தது. காகம் அழுதது. சுற்றிச் சுற்றிப்பறந்து "கா... கா..." என்று கரைந்தது. அதன் உறவினர்கள் அனைவரும் வந்து கூடினர்.

"ஏன் அழுகின்றாய் உனக்கு என்ன நடந்தது?" எல்லோரும் கேட்டனர். காகம் நடந்தவற்றைக் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இது குயிலின் வேலையாகத்தான் இருக்கும், குயிலிடம் கேட்போம் வாருங்கள்” எனக்கூறி அவை குயிலைத் தேடிச்சென்றன. குயில் அங்குமிங்கும் வேகமாக பறந்து பறந்து மறைந்தது. காகங்கள் துரத்திச் சென்றன. ஒரு மரக்கிளையில் மறைந்துகொண்டிருந்த குயிலை அவை பிடித்துவிட்டன.

“என்னை ஒன்றும் செய்யாதீர்கள் நான் உண்மையைக் கூறுகின்றேன்” எனக் குயில் பயந்து நடுங்கியபடி கெஞ்சியது.

“சரி சரி கூறு”, என்று காகங்கள் கூறின. குயில் குற்றத்தை ஒப்புக்கொண்டது. தன்னை மன்னிக்குமாறு கேட்டது.

இனிமேல் இப்படிச்செய்யாதே, காகங்கள் குயிலை மன்னித்துவிட்டன.

எல்லாக் காகங்களும் சேர்ந்து குயிலுக்கு ஒரு கூட்டினைக்கட்டிக் கொடுத்தன. குயிலும் கூட்டில் வாழத்தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாட்கள் சென்றன. காகத்தின் கூட்டில் இருந்த முட்டைகளில் இருந்து குஞ்சுகள் வெளியே வந்தன.

காகம் இட்ட முட்டையிலிருந்து வெளியே வந்த குஞ்சுகள் கா... கா... என்று கரைந்தன. குயில் இட்ட முட்டையிலிருந்து வெளியே வந்த குஞ்சுகள் கூ...கூ... என்று கூவின.

காகம் குயிலைக் கூப்பிட்டது. அதன் குஞ்சுகளை அதனிடம் கொடுத்தது.

குயில் தனது குஞ்சுகளை தனது கூட்டில் வைத்துக் காப்பாற்றியது.

காகமும் குயிலும் சந்தோசமாக வாழ்ந்தன.

குயில் காகக் குஞ்சுகளுக்கும் பாட்டுச் சொல்லிக்கொடுத்தது.

கா... கா... கா... கூ... கூ... கூ...
கூ... கூ... கூ... கா... கா... கா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உதவிய உள்ளங்கள்

மூங்கிலாறு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. இரு கரைகளையும் இடித்துக்கொண்டு ஆற்றில் வெள்ளம் பாய்ந்து ஓடியது. ஆற்றின் இடது கரையோரத்தில் ஒரு பெரிய ஆலமரம் நின்றது. அதன் அடியில் வந்து கரையேறிய ஆமை கூறியது.

'இந்த வருடம் பெரிய வெள்ளம் இதுபோல் வெள்ளம் இருபது வருடங்களுக்கு முன்புதான் வந்தது. நான் அப்போது மிகவும் சிறியவன் எனது தாயின் முதுகின் மீது ஏறியிருந்து பயணம் செய்தேன்.'

மரக்கிளையில் அச்சத்துடன் ஒட்டி இருந்த-வாறு ஓணான் ஆம்,ஆம் எனத்தலையை ஆட்டியது.

அந்த மரம் அழகான மரம். பறவைகள் அந்த மரத்தை விரும்பி வந்து கூடுகளைக் கட்டி வாழ்ந்தன.

தூக்கணாம் குருவிகள் மிகவும் அழகான கூடுகளைக்கட்டி வாழ்ந்தன. மழையோ வெயிலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் கூட்டினுள் செல்ல முடியாது. காற்று வீசும்போது அதன் கூடுகள் அழகாக அசைந்து ஆடின.

கொக்கின் கூடு அப்படியானதல்ல. கொக்கு சிறு சுள்ளிகளைச் சேர்த்துக் கட்டியிருந்தது. அந்தக் கூட்டிற்கு கூரை இருக்கவில்லை. மரம் தனது இலைகளால் வெயிலையும், மழையையும் தடுத்து உதவியது. இன்னும் ஒரு மரக்கிளையில் இருந்த பொந்தில் கிளி தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தது. அதற்கு நான்கு குஞ்சுகள் இருந்தன. இன்னும் பல்வேறு பறவைகளும் கூடுகளைக்கட்டி முட்டைகளையிட்டு அந்த மரத்தில் வாழ்ந்து வந்தன.

அணில், குரங்கு, குளவிகள், தேனீக்கள் எனப் பல்வேறு உயிரினங்களும் அந்த மரத்தை நம்பி ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன.

மழை விடாது பெய்து கொண்டிருந்தது. இடி, மின்னல் காற்றுடன் வேகமாக பெய்தது. அனைவருக்கும் பசித்தது. ஆனால், வெளியில் செல்ல முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓணான் சற்றுக் கீழே இறங்கியது. தனது கால் நகத்தால் மரத்தின் அடிப்பாகத்தில் ஒரு கோடு கீறியது. "என்ன செய்கிறாய்" ஆமை கேட்டது. நீர் மட்டம் உயருகின்றதா என்பதை அறிய இந்தக் கோடு உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியா.. ஆமையும் ஒரு தடியைக் கரையோரத்தில் நாட்டி வைத்தது. நானும் கவனமாகப் பார்க்கின்றேன். மரத்தை நம்பியிருந்த அனைவரும் மிகவும் அச்சமடைந்தனர்.

மரம் காற்றையும், மழையையும் எதிர்த்து நின்று போராடியது. இன்னும் பலமாகக் காற்று வீசியது. 'இது சூறாவளியாக இருக்கலாம்' என்றது குரங்கு.

எவரும் எதிர்பார்க்கவில்லை. திடீரென மரம் அடியோடு சாய்ந்து ஆற்றில் விழுந்தது. எங்கும் அவல ஓசை. மரத்தில் வாழ்ந்த அனைத்து உயிரினங்களும் ஆற்றில் சிதறி விழுந்தன. சில பெரிய பறவைகள், குஞ்சுகளை அழைத்த வண்ணம் இருட்டில் அங்குமிங்கும் மோதுண்டு அலைந்தன. பறவைகள் அழுதன. எவராலும் எதுவும் செய்ய முடியவில்லை. ஆமை நீந்திச்-சென்று சில பறவைக்குஞ்சுகளைக் காப்பாற்றித் தனது முதுகில் ஏற்றிக்கொண்டு கரையை வந்தடைந்தது. குரங்குகளும் உதவின. ஓணான் காயமடைந்த குஞ்சுகளுக்கு இலைகளை வைத்து மருந்து கட்டியது. மீட்புப் பணிகள் விரைவாகத் தொடங்கியது. காகங்களும் உதவிக்கு வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை ஊருக்குள் சென்று உணவுப் பொதிகளைச் சேகரித்து வந்து கொடுத்தன.

நாரைக்கொக்குகள் தூர இடங்களுக்குப் பறந்து சென்று உதவி கோரின. அனைவரும் வந்து உதவி புரிந்தனர்.

பறவைகள் தமது குஞ்சுகளை எண்ணி ஏங்கித் தவித்தன. அவற்றிற்கு ஏனைய பறவைகள் ஆறுதல் கூறின. 'புதிய கூடுகளை அமைத்துக் கொள்ளலாம் அதில் முட்டையிட்டுக்குஞ்சு பொரிக்கலாம்' எனக் கூறி பறவைகளைத் தேற்றின.

தற்காலிகமாகப் புதிய கூடுகளைப் பாதுகாப்பான இடங்களில் அமைத்துக் கொள்வதற்குத் தேவையான பொருட்களை அனைவரும் கொண்டுவந்து கொடுத்தனர்.

அணில்கள் முட்டையிடுவதற்கு ஏற்ற பஞ்சு மெத்தைகளை வழங்கின. ஓணான் கூடு கட்டுவதற்குத் தேவையான நார்களைக் கொண்டு வந்து கொடுத்தது. குரங்குகள் உறுதியான சுள்ளிகளைச் சேகரித்துக் கொடுத்தன. எல்லாப் பறவைகளுக்கும் கூடுகள் அமைக்கப்பட்டு விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் பொழுதிற்குள் இவற்றை எவ்வாறு கட்டி முடித்தோம் எனப் பறவைகள் அதிசயித்தன. ஒற்றுமையின் பலந்தான் இது என்றது ஆமை.

மறுநாள் பழம் எடுத்து வரச்சென்ற பச்சைக்கிளி மிகவும் மகிழ்ச்சியான செய்தியுடன் வந்தது.

பறவைக் குஞ்சுகள் எல்லாம் பத்திரமாகக் கரை ஒதுங்கியதாகவும் நாரைக் கொக்கினால் காப்பாற்றப்பட்டு நலன்புரி விடுதியில் அவை எல்லாம் உயிருடன் இருப்பதாகவும் கிளி கூறியதும் அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

அவர்கள் தமது தாய் வீடான மரத்தினை மறந்துவிடவில்லை. யானைகளிடம் சென்று உதவிகோரின.

யானைகள் கூட்டமாக வந்தன. சாய்ந்து கிடந்த மரத்தை இழுத்து நிமிர்த்தின. மண் மூடைகளைக் கொண்டு வந்து அடுக்கி வெள்ள நீர் மரவேர்களை அரிக்காமல் பாதுகாப்பு வழங்கின சிறிது காலம் சென்ற பின் அந்த மரம் பழையபடி உயிரினங்களின் தாய் வீடாக மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கடல் கூறிய கதை

மண்டூர் கிராமத்தில் இருந்து மேற்குப்பக்கமாக பத்து கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் கிராமந்தான் பலாச்சோலை. இக்கிராமத்திற்குச் செல்வதாயின் ஒற்றையடிப் பாதையூடாகத்தான் செல்ல வேண்டும். பெரிய வீதிகளும், பாலங்களும் இன்னும் அக்கிராமத்திற்கு செல்ல அமைக்கப்படவில்லை. அதனால் அக்கிராமம் ஒரு தீவுபோல தனிமையாக்கப்பட்டுக் கிடந்தது.

கண்ணன் அங்கேயுள்ள பாடசாலையில் தரம் ஐந்து கற்கும் மாணவன். நீண்ட நாட்களாக அவன் மனதில் ஒரு ஆசை. ஒரு முறையாவது கடற்கரைக்குச் செல்லவேண்டும், கடலைப் பார்க்க வேண்டும் என்பதுதான் அவனது அந்த ஆசை. பலாச்சோலைக் கிராமத்திலிருந்து சுமார் இருபது கிலோமீற்றர் தூரத்திற்கப்பால் தான் கடல் இருந்தது. இரண்டாந் தவணைப் பரீட்சை முடிவடைந்ததும் அவனது வகுப்பாசிரியர் ஒரு நாள் "உங்களில் கடலைக் காணாதவர்கள் யாராவது இருக்கின்றீர்களா?" எனக் கேட்டதுதான் தாமதம் அனைவரும் இல்லை என்று பதிலளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடுத்த வாரம் பாடசாலை அதிபரின் அனுமதியைப் பெற்றுக் கல்விச்சுற்றுலா மூலம் வகுப்பாசிரியர் மாணவர்களை கடற்கரைக்கு அழைத்துச் சென்றார்.

கடல் நீலநிறமாகத் தெரிந்தது. அதன் மறுகரை தெரியவில்லை. கடற்கரை சுத்தமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாகவும் இருந்தது. மாணவர்கள் ஓடியாடி விளையாடினார்கள். கடல் அலைகள் அமைதியாக மாணவர்களின் பாதங்களைத் தழுவி முத்தமிட்டுச் சென்றன.

சிறிய நண்டுகள் அலையுடன் அள்ளுண்டு வந்து கடற் கரை எங்கும் சிதறி ஓடி மறைந்தன. மாணவர்கள் கடற்கரை ஓரங்களில் கிடந்த சிப்பிகளையும், சோகிகளையும் பொறிக்கிச் சேகரித்தனர். அவர்களுக்கு வீடு செல்ல மனமேயில்லை. பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றனர்.

இவை நடந்து ஒரு மாதமும் ஆகவில்லை. 26.12.2004 அன்று கடற் பேரலைகள் பொங்கியெழுந்து கடற்கரை ஓரங்களைத் தாக்கின. அங்கு வாழ்நத மக்களை மூழ்கடித்துக் கொன்றன. அவர்களின் வீடு வாசல் உடைமைகள் எல்லாம் முற்றாக அழித்து விட்டன.

கண்ணனுக்கு அதை நம்ப முடியவில்லை. அழகிய கடல், மனித உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமான கடல், தெய்வமாக விளங்குகின்ற கடல். இவ்வாறான செயலைச் செய்யுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனின் மனம் அமைதி இழந்தது. அவனுக்குப் படிப்பதற்கு மனம் வரவில்லை. பாடசாலைக்குச் செல்வதற்கும் விரும்பவில்லை. சோர்வாகவும் எதையோ நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டும் இருந்தான். சீ அந்தக் கடல் இப்படி அழித்து விட்டதே குழந்தைகளையும், சிறுவர்களையும் அநியாயமாகக் கொன்றுவிட்டதே என எண்ணியவாறு படுத்து உறங்கிவிட்டான்.

கடல் அவனுக்கு அருகில் வந்தது. மெதுவாகக் கண்ணனின் கால்களை வருடியது. 'கண்ணா என் மீது உனக்கு கோபமா?'

"நான் உன்னுடன் பேசமாட்டேன் போ... போ..."

"ஏன் என்மீது கோபப்படுகிறாய்?"

"கடலே நீ பேரலைகளை உருவாக்கி மக்களை எல்லாம் கொன்று குவித்துவிட்டு இப்போது அப்பாவியாக நடிக்கின்றாயா? நீ போ நான் உன்னுடன் பேசமாட்டேன்."

"இல்லை கண்ணா இல்லை எல்லோரையும் போல நீயும் என்னைத் தவறாகப் புரிந்து விட்டாயே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்போ நீ ஒன்றும் செய்யவில்லையா?”

“இல்லை கண்ணா மழை பெய்வதற்கும் உலகில் உயிரினங்களின் வாழ்வு நிலைப்பதற்கும் ஆதாரமாக இருக்கும் நான், உங்களுக்கு உணவு தரும் நான் எனது பிள்ளைகளாகிய மனிதர்களை நானே கொல்வேனா? ஏன் என்னை இப்போ எல்லோரும் வெறுத்து ஒதுக்குகின்றனர். நான் என்ன செய்வேன்” எனக் கடல் ஒப்பாரி வைத்து அழுதது.

கண்ணனுக்கு ஒருபுறம் கடலைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தாலும் அது கூறுவதை அவனால் நம்ப முடியவில்லை.

“கண்ணா நான் சொல்வதைக் கேள் கடலுக்கு அடியில் நிலம் உண்டு. மலைகள், பாறைத் தொடர்கள் எல்லாமே உண்டு. அந்தப் பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டு பாறை ஓடுகள் அதிர்ந்து வெடிக்கும் போது நான் தூக்கி எறியப்படுகின்றேன். அந்த வேகமான தாக்கத்தால் என்னில் இருந்து பேரலைகள் உருவாகி மிக வேகமாகக் கிளம்புகின்றன. அந்த அலைகள் கரையோரங்களை அழித்து விடுகின்றன. என்னால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கட்டுப்படுத்த முடியாது. எறிந்தவன் இருக்கக் கல்லை நோகலாமா? கண்ணா நீ வீதியால் சென்றுகொண்டிருக்கின்றாய் உன் மீது ஒருவன் கல்லை எடுத்து வீசுகின்றான். கல் உன்னைத்தாக்கி விட்டது. நீ கல் மீது குற்றம் சொல்வாயா? கல் எறிந்தவன் மீது குற்றம் சொல்வாயா?" இவ்வாறு கடல் சொல்லிவிட்டு மறைந்து விட்டது. கண்ணன் சிந்தித்துப் பார்த்தான். கடல் மீது குற்றம் இல்லை என்பதை உணர்ந்தான்.

"கடலே நில் நில் உன்மீது குற்றம் இல்லை. நில் நில் போகாதே" என்று வாய்விட்டுக் கத்தினான்.

"என்ன? கண்ணா கனவு கண்டாயா? எழும்பு எழும்பு பாடசாலைக்கு நேரமாச்சு" கண்ணனின் தாய் சிரித்தபடி எதிரில் நின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05 உயிர்காத்த நண்பன்

“நீ ஏன் என் பின்னால் வருகின்றாய்? போ... போ... வராதே” என்றது கரடி “கரடியாரே என்னைத் துரத்தாதீர்கள். எனக்குப் பசி தாங்க முடியவில்லை. உங்கள் பின்னால் வந்தால்நீங்கள் சாப்பிட்டு விட்டு போடும் மீதியை நான் சாப்பிட்டு உயிர்பிழைத்துக் கொள்வேன். தயவு செய்து என்னைத் துரத்தி-விடாதீர்கள்” என்று நரி கரடியிடம் கெஞ்சியது.

“இல்லை... இல்லை இந்தப் பனிப்பாறைகளின் இடையே புகுந்து என் கைகளால் பாறைகளைப் பிளந்து கஷ்ரப்பட்டு நான் மீன்களை வேட்டையாடித் தர நீ ஒரு வேலையும் செய்யாமல் பின்னால் திரிந்து எனது எச்சிலைச் சாப்பிட்டு... உயிர் வாழ்வதா? நீ என்பின்னால் வராதே வந்தால் உன்னைக் கடித்து கொன்றுவிடுவேன்... சோம்பேறியே ஓடிவிடு ... போ ... போ.. போய்விடு” என்று கரடி நரியை துரத்தியது.

“கோபிக்க வேண்டாம் ஐயா உங்கள் தயவிலேதான் இந்தக் குளிர்காலம் முடியும் வரை என்னால் வாழமுடியும். நான் எனது நான்கு குட்டிகளுக்கும் பாலூட்ட வேண்டும் அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியே விட்டு வேறு தூர இடங்களுக்கும் என்னால் செல்ல முடியாது. குளிர்காலம் முடிந்தவுடன் நான் தனியே சென்று எனக்குத் தேவையான உணவைத் தேடிக்கொள்வேன். என்னைத் துரத்தாதீர்கள்" ஐயா நரி பயந்து நடுங்கியபடி கரடியிடம் இரந்து கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரடி அதற்குச் சம்மதிக்கவில்லை. உறுமியவாறு பாய்ந்து நரியைத் துரத்தியது. "நீ எங்காவது போ. நான் சாப்பிடும் போது நீ பார்த்துக்கொண்டு நின்று கொட்டாவி விடுவதனால் எனக்கு நன்றாகச் சாப்பிட முடிவதில்லை. நீ எங்காவது ஓடிப் போ.." என நரியை துரத்தியது. நடுங்கும் குளிரில் நரி பசியுடன் அவ்விடத்தை விட்டுச் சென்றது.

கரடி வேகமாக வேறுபக்கம் ஓடிச் சென்றது. அது பனிக்கட்டிகளை உடைத்து மீன்களைப் பிடித்துத் தின்றது. மீதியை அங்கேயே போட்டுவிட்டு மீண்டும் மீன்களைப் பிடித்துத் தின்ற வண்ணம் வெகு தூரத்திற்குச் சென்றது.

"இன்று நல்ல வேட்டை, நல்ல சாப்பாடு என்று கூறியபடி" அது ஒரு பனிப்பாறையில் ஏறிப் படுத்துத் தூங்கிவிட்டது.

பசியால் வாடிய நரி அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது. அதற்கு உணவு எதுவும் கிடைக்கவில்லை. சிறிது நேரத்தின் பின்பு தொலைவில் வேட்டைக்காரர்கள் சிலர் துப்பாக்கியுடன் வருவதை நரி கண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரி மெதுவாகப் பனிப்பாறை ஒன்றினுள் மறைந்து அவர்களைக் கவனித்தது. "ஏதும் உணவு கிடைக்கலாம்" என்று எண்ணியபடி வேட்டைக்-காரர்களின் பின்னால் சத்தம் இன்றி சென்றது.

அப்போது வேட்டைக்காரன் ஒருவன் ஏதோ ஒரு பொருளைக் கண்டு மகிழ்ச்சியுடன் மற்றவர்களை அழைத்தான். அனைவரும் சென்று பார்த்தனர். கரடி தின்றுவிட்டு வீசிய மீனின் பாகங்கள் அவை. அவர்கள் கரடியை வேட்டையாடுபவர்கள் கரடியின் தோலை உரித்து எடுத்துச் செல்லவே அங்கு வந்துள்ளனர் என்பதை நரி அறிந்து கொண்டது.

வேட்டைக்காரர்கள் கரடி உண்டுவிட்டுப் போட்டபடி சென்ற மீதி மீன்களை தொடர்ந்து சென்றனர்.

இறுதியில் கரடிபடுத்து உறங்கும் இடத்தை நெருங்கிவிட்டனர். அவர்கள் துப்பாக்கியை நீட்டிக் குறி பார்த்த வண்ணம் மெதுவாக நகர்ந்தனர்.

கரடி இன்னும் சொற்ப நேரத்தில் இறக்கப்-போகின்றதே... இவ்வளவு காலமும் அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரடியின் தயவில்தானே நான் வாழ்ந்து வந்தேன் என நரி எண்ணியது.

நரி நன்றியை மறக்கவில்லை. துரிதமாகச் செயற்பட்டது. அது உரத்த குரலில் ஊளையிட்டது.

நரியின் ஊளைச்சத்தத்தால் உறக்கம் கலைந்த கரடி... கோபத்துடன் நரியைக் கொல்வதற்காகப் பாய்ந்தது. அப்போது டுமீல்.. டுமீல்.. வேட்டைக்காரனின் துப்பாக்கி வெடித்தது. குறி தவறி விட்டது. கரடி தப்பிவிட்டது.

நடந்ததை உணர்ந்த கரடி நரி காட்டிய பாதையை பின் தொடர்நது மறைந்து உயிர் தப்பிவிட்டது.

தனது தவறை உணர்ந்த கரடி உயிர் காத்த நரியை அன்றுமுதல் தனது நண்பனாக ஏற்றுக் கொண்டது. அதன் பின் வேட்டைக்காரர்களுக்கு கரடி பற்றிய தடயம் எதுவும் கிடைக்வில்லை. நரி கரடியைப் பின்தொடர்ந்து அது விட்டுச் செல்லும் மீதி மீன்களை சாப்பிட்டு கரடிக்குப் பாதுகாப்பு வழங்கி வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. விடுதலை

அன்பன் பாலமுனைக் கிராமத்திலுள்ள அரசினர் பாடசாலையில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவன். அன்பன் தனது வகுப்பில் படிக்கும் நண்பர்களை அன்று மாலை தனது வீட்டிற்கு வருமாறு அழைத்திருந்தான்.

தான் ஆசையாக வளர்த்து வரும் இரண்டு கிளிக் குஞ்சுகளையும் நண்பர்களுக்குக் காட்டுவதற்காகவே அவர்களை அழைத்திருந்தான். அவர்களும் மிகவும் ஆவலுடன் அங்கு சென்றனர். அன்பன் இரண்டு கிளிக்குஞ்சுகளையும் ஒரு இரும்புக் கூண்டில் அடைத்து வைத்திருந்தான். அவை மிகுந்த பயத்துடனும்கவலையுடனும் அக் கூண்டினுள் வாழ்ந்தன. தமது தாயையும், தந்தையையும் உறவினர்களையும் எண்ணி எண்ணி அவை ஏங்கி வாடிக்கிடந்தன.

அன்பனின் நண்பர்கள் பழங்களைக் கொண்டு வந்திருந்தனர். அவற்றை ஆசையுடன் கிளிக் குஞ்சுகளுக்குக் கொடுத்தனர். அவை உண்ண-வில்லை மறுபக்கம் திரும்பியிருந்து அழுதன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் உனது கிளிக்குஞ்சுகள் நாங்கள் கொடுக்கும் பழங்களை உண்ணாமல் அழுகின்றன?" நண்பர்கள் கேட்டனர்.

அன்பனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை

நீங்கள் இன்றுதானே வந்திருக்கின்றீர்கள், சில நாட்கள் பழகினால் அவை உங்களைக் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமடையமாட்டாது. நீங்கள் கொடுக்கும் பழங்களையும் வாங்கி உண்ணும்" என்று கூறி அன்பன் நண்பர்களைச் சமாதானப்படுத்தினான்.

நண்பர்களிடம் ஏற்கனவே அன்பன் தனது கிளிக்குஞ்சுகள் பேசும் எனவும் பழங்களைக் கொடுத்தால் விரும்பி வாங்கி உண்ணும் எனவும் கூறியிருந்தான். இன்று அவன் கூறியவை பொய் என்பதை நண்பர்கள் அறிந்துகொண்டனர். அவர்கள் அன்பன் கூறியதை நம்பவில்லை.

அதன் பின் சில வாரங்கள் ஓடி மறைந்தன. இப்போது அன்பன் கிளிக் குஞ்சுகளைப் பற்றி பாடசாலையில் எதுவும் கதைப்பதில்லை. நண்பர்களும் அவனிடம் அதைப்பற்றி எதுவும் கேட்பதுமில்லை.

மூன்றாம் பாடவேளை தமிழ்ப் பாடம். வாசிப்பு, ஆசிரியர் தரம் 5 தமிழ் பாடப் புத்தகத்தின் பதினாறாம் பாடம், 106 ம் பக்கம் ஒவ்வொருவராக பந்திகளை நிறுத்தற் குறியீடுகளை அவதானித்து உரத்து வாசிக்குமாறு கூறினார். மாணவர்களும் ஆர்வமாக வாசித்தனர். அடுத்த பந்தியை அன்பன் வாசித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை விதம் விதமான பழங்களை நீங்கள் எனக்குத் தந்திருக்கின்றீர்கள் ஆனாலும் சுதந்திரமாக பறந்து திரிந்து மரங்களிலே பழுத்திருக்கும் கனிகளைக் கொத்தித் தின்பதிலே உள்ள சுவை இதிலே கிடைத்திடுமா? சுதந்திரமாகத் தானியங்களைக் கொத்தி உண்பதில் உள்ள சுகம் இங்கே உண்டா?

அன்பன் இவ்வாறு வாசித்ததும் அன்பனின் நண்பர்கள் தம்மை மறந்து கொல்லெனச் சிரித்தனர். "ஏன் சிரிக்கிறீர்கள்? நகைச்சுவையான விடயம் எதுவும் இதில் இல்லையே..." பாட ஆசிரியர் இவ்வாறு கேட்டார்.

"சேர்... மன்னித்துக் கொள்ளுங்கள் சேர்..." அன்பன் தனது வீட்டில் இரண்டு கிளிக் குஞ்சுகளைப் பிடித்து கூண்டில் அடைத்து வைத்துள்ளான். அதை நினைத்ததும் எங்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது என்று மாணவர்கள் கூறினர்.

அன்பன் தலைகுனிந்த வண்ணம் இருந்தான். "கூண்டுக் கிளியொன்று தன் கதை கூறல்" பாடம் வாசித்து முடிந்ததும் மாணவர்கள் தமது கருத்துக்களைக் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பறவைகளைக் கூண்டில் அடைத்து வளர்ப்பது பாவமான காரியம்" என்று சில மாணவர்கள் கூறினர்.

இன்னும் சிலர் "ஒரு தீமையும் செய்யாத கிளிகளுக்கு ஏன் மனிதர்கள் சிறைத்தண்டனை விதிக்கின்றனர்?" என்றனர்.

Donated by Save the Children in Sri Lanka,

"என் நிலையை உணர்ந்து எனக்கு விடுதலை பெற்றுத் தர விரும்பும் மனித உள்ளங்களை எதிர் பார்த்து, என் வாழ்நாளை கழித்து வருகின்றேன். எப்போ எனக்கு விடிவு கிட்டும்?"

என்ற இறுதிப் பந்தியை வாசிக்கும்போது தனக்கு அழுகை வந்துவிட்டதாக இன்னும் ஒரு மாணவி கூறினாள்.

இறுதியாக அன்பன் எழுந்துநின்று தான் செய்த தவறுக்காக ஆசிரியரிடமும், மாணவர்களிடமும் மன்னிப்புக் கோரினான். பாடசாலை விட்டு வீடு சென்றதும் கூண்டுக் கிளிகளை திறந்துவிடப் போவதாகக் கூறினான். ஆசிரியர் அன்பனைப் பாராட்டினார். மாணவர்கள் கரகோசம் செய்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பின்னேரம் அன்பனின் நண்பர்களின் முன்னிலையில் கிளிக்குஞ்சுகள் திறந்து-விடப்பட்டன.

மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கிளிகள் வானில் பறந்து மகிழ்ந்தன. அவை மறையும் வரை அன்பனும், நண்பர்களும் பார்த்துக் கொண்டு நின்றனர்.

Donated by Save the Children in Sri Lanka,

அவர்களுக்கும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பாம்புகள் கூறிய தகவல்

கல்லடிப் பாலம், கடலுடன் வாவி கலக்கும் முகத்துவாரத்திலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால், வாவிக்கு மேலாக அமைக்கப்பட்டிருந்தது. கீழே வாவி அமைதியாகக் கடலை நோக்கி ஓடிக்கொண்டிருந்து.

இளநிலாவும், முகியும் கைகோர்த்த படி பாலத்தின் நடைபாதையூடாக இயற்கை அழகை ரசித்த வண்ணம் சென்று கொண்டிருந்தனர்.

இந்த வாவியில் பாடும் மீன்கள் உள்ளன. அவை மிகவும் இனிய ஓசையை எழுப்பிப் பாடும்... பூரணை தினத்தில் இரவில் அந்தப் பாடும் மீன்களின் இசைவிருந்தை நான் கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன் என்று இளநிலா தனது நண்பியான முகியிடம் கூறினாள்.

முகியும் பாடும் மீன்களின் இசையைக் கேட்பதற்கு மிகவும் விரும்பினாள். இருவரும் வாவி ஓரத்தில் இருந்த கல் ஒன்றில் கால்களை நீருள் அசைத்த வண்ணம் அமர்ந்தனர். பாடும் மீன்களைப் பற்றிய பல கதைகளை இளநிலா முகிக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினாள். முகி மிகவும் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது காலில் ஏதோ ஒருபொருள் கயிறு போல... தட்டுப்படுவதை முகி உணர்ந்தாள். காலை மெதுவாக தூக்கினாள். மறுகணம் "ஐயோ"... என அலறிக் கொண்டு பாய்ந்தோடினாள்.அவளது காலில் இருந்து பாம்பு ஒன்று கீழே விழுந்தது. பாம்பு... பாம்பு... பாம்பு... இளநிலா.... அபயக் குரல் எழுப்பியவாறு அங்கும் இங்கும் ஓடி ஓடி அழுதாள்.

"பயப்பட வேண்டாம்... நான் உங்களுக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன். என்னை நம்புங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள்" பாம்பு ஒன்று கரைக்கு வந்து... மிகவும் பணிவாகக் கூறியது.

பாம்பே... நீ எங்களைக் கடிப்பதற்காகத்தான் இங்கு வந்துள்ளாய். நாங்கள் நீ கூறுவதை நம்ப மாட்டோம். நீ பொய் சொல்லுகின்றாய். இளநிலாவும், முகியும் அழுதவண்ணம் கூறினர்.

"நான் பொய் கூறவில்லை என்னை நம்புங்கள். நான் சொல்வதை தயவு செய்து கேளுங்கள்..." நானும் என் இனத்தவரும் சுமத்திராத் தீவின் தென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கில் சுமார் 250 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கடலில் வசித்து வந்தோம். எங்கள் இனத்தின் வயது முதிர்ந்தவர்கள் கடலடியில் ஏதோ மாற்றம் ஏற்படுவதை உணர்ந்தனர். நிலநடுக்கம் ஏற்படப்போவதையும், அதனால் கடலில் பேரலைகள் தோன்றி பெரிய அழிவுகள் ஏற்படப் போவதையும் உணர்ந்தனர். எங்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளனர். இங்கும் பாதுகாப்பு இல்லையென அவர்கள் கருதினால் வேறு இடத்திற்கு எங்களை அழைத்துச் சென்றுவிடுவார்கள்.

நான் கூறுவதை நீங்கள் நம்பாவிட்டால் இந்தப்பாலத்தின் மேல் நின்று வாவியை பாருங்கள் உண்மை புரியும். என்று பாம்பு கூறியது.

இளநிலாவும் முகியும் வேமாகச் சென்று பாலத்தில் ஏறி நின்று கீழே உற்றுப் பார்த்தனர்.

என்ன அதிசயம்... அவர்களின் கண்களையே அவர்களால் நம்ப முடியவில்லை. வாவி நிறையப் பாம்புகள். பச்சை வண்ணப் பாம்புகள், நீல நிறப் பாம்புகள், கோடுகளும் புள்ளிகளும் கொண்ட பாம்புகள் திரள் திரளாகப் பாம்புகளால் வாவி நிறைந்து காணப்பட்டது.

மறுநாள் இந்தச் செய்தி காட்டுத்தீபோல் ஊரெங்கும் பரவியது. மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கல்லடிப் பாலத்தில் நின்று வண்ண வண்ணப் பாம்புகளைக் கண்டு மகிழ்ந்தனர். சில சிறுவர்கள் கற்களை வீசி அவற்றைத் தாக்கினர். இளநிலாவும் முகியும் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புகள் இங்கு வந்ததற்கான காரணத்தைக் கூறினர். ஆனால் எவருமே அவர்கள் கூறியதை நம்பவில்லை. அவர்களை ஏளனம் செய்தனர். இளநிலாவும் முகியும் துக்கத்துடன் அவ்விடத்தை விட்டுச் சென்றனர். மறுநாள் மாலை அவர்கள் வந்து பார்த்தபோது ஆற்றில் ஒரு பாம்பு கூட இருக்கவில்லை. அவை எங்கோ சென்றுவிட்டன. முகிக்கும் இளநிலாவுக்கும் மிகவும் துக்கமாக இருந்தது. பாம்புகள் ஏன் சென்றன என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

இது நடந்து ஒரு சில நாட்கள் சென்றன. "சுனாமிப்" பேரலைகளால் கல்லடிப் பிரதேச கடற்கரையோரக் குடியிருப்புகள் எல்லாம் முற்றாக அழிந்து விட்டன. அங்கு வாழ்ந்த மக்கள் தமது வாழ்வில் ஒரு காலமும் கண்டிராத.. பேரழிவைச் சந்தித்தனர். எமது நாட்டின் பெரும்பாலான கடற்கரை ஓரங்கள் பாதிப்புக்கு உள்ளாகின. பல்லாயிரக்கணக்கான மக்கள். இறந்து விட்டனர்.

இந்த உலகம் மனிதர்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. அனைத்து உயிரினங்களுக்கும் இந்த உலகம் சொந்தமானது. மனிதர்களுக்கு இருக்கும் ஆற்றல்கள் போல ஏனைய உயிரினங்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் விசேட ஆற்றல்கள் உண்டு. நாம் ஏனைய உயிரினங்களிடமும் அன்பு செலுத்தி வாழ வேண்டும். ஏனைய உயிரினங்கள் வாழ்வதற்கு நாம் தடையாக இருக்கக்கூடாது. அவற்றின் செயற்பாடுகளை முன் மாதிரிகளை எல்லாம் நாம் அறிந்திருக்க வேண்டும்... என்ற உண்மையை பாம்புகளின் இடப்பெயர்வு மக்களுக்கு உணர்த்தியது.

மக்கள் இளநிலாவையும், முகியையும் பாராட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. மந்திரக் கிழவியின் தந்திர வாழ்க்கை

"துணையான் கல்" என்றாலே அவ்வூர் மக்களுக்குப் பேய்களின் இருப்பிடம் என்ற எண்ணம்தான் வரும். ஏனெனில் மந்திரக் கிழவி மக்கள் மத்தியில் பேய்களைப்பற்றிப் பலவிதமான கதைகளைக் கூறியிருந்தாள்.

"துணையான் கல் பகுதிகளில் பேய்கள் வாழுகின்றன. அவை கொடிகளைப் பயன்படுத்தி ஊஞ்சல் கட்டி ஆடும். தமது பிள்ளைகளையும் அவை ஊஞ்சலில் வைத்து ஆட்டும். அவற்றின் கண்கள் சிவப்பு நிறம், தலைமயிர் கலைந்து கிடக்கும், மனிதர்களைக் கண்டால் சேலை அவிழ்ந்து விழப்போகின்றது, பிள்ளையைக் கொஞசம் பிடியுங்கள் என்று கூறி பிள்ளையைத் தந்துவிடும். பிள்ளையை யார் வாங்குகின்றார்களோ, அவர் உடனே பேயாக மாறி விடுவார் அவரைப் பேய்கள் தமது கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளும். இதனை நான் நேரடியாகக் கண்டுள்ளேன்" என்று மந்திரக் கிழவி ஊர் மக்களிடம் கூறியிருந்தாள். இதனால் துணையான் கல் பகுதிக்கு மக்கள் எவருமே செல்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண தடிமன், காய்ச்சல் வந்தாலும் "அது பேய்களின் பார்வை பட்டதனால்தான் வந்தது" என்பாள். அல்லது "உங்கள் எதிரிகள் உங்களுக்குச் சூனியம் செய்துள்ளனர்" என்று கூறுவாள். ஊர் மக்களும் இதனை நம்பி அவள் கேட்கும் பூசைப் பொருட்களையும், சேவல் கோழிகளையும் கொடுத்து பூசை செய்து பேய்களுக்குப் படைத்து தம்மைக் காப்பாற்றுமாறு வேண்டிக்கொள்வர்.

மந்திரக் கிழவியும் அவற்றை வாங்கிக் கொண்டு இரவில் தனியே சென்று பேய்களை மந்திர சக்தியினால் அழைத்து பூசை செய்து, கோழிகளை அறுத்து பலிகொடுத்து உங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவேன் எனக் கூறுவாள்.

காட்டினுள் சென்று மறைந்தும் விடுவாள். அவ் ஊர் மக்கள் இதனை நம்பிக் கொண்டு அச்சத்துடன் வாழ்ந்து வந்தனர். மந்திரக்கிழவியும் மக்களை ஆட்டிப் படைத்துச் சுகமாக வாழ்ந்து வந்தாள்.

ஒரு நாள் கலையும், மணியும் பாடசாலை விட்டதும் வீட்டிற்குச் சென்று சாப்பிட்டு விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னேரம் நாவல்பழம் பொறுக்குவதற்காக வயல்பக்கம் சென்றனர். நாவல் மரங்கள் வயல்வெளியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நின்றன. ஒவ்வொரு மரத்திலுமிருந்து பழங்களைச் சேகரித்தவண்ணம் வெகு தூரத்திற்கு அவர்கள் சென்றுவிட்டனர். அவர்கள் சென்றடைந்த இடம் துணையான் கல் பகுதிக்காடு என்பது அவர்களுக்குத் தெரியாது. அங்கு கிளாப்-பழங்களும் சூரைப்பழங்களும், ஈச்சம் பழங்களும் நிறையப் பழுத்துக் கிடந்தன. மனிதர்கள் அப்பகுதிக்குச் செல்லாத காரணத்தால் பழங்கள் ஏராளமாக அங்கே காணப்பட்டன. இருவரும் முடிந்த அளவிற்குப் பழங்களைச் சேகரித்துக் கொண்டு வீடு செல்வதற்கு ஆயத்தமாகினர்.

திடீரென காட்டுப் பற்றைகள் அசைந்தன. கொடிகள் தாமாகவே ஊஞ்சல் ஆடின. "கீச்... கீச்..." என்று ஓசை எழுந்தது. கலையும் மணியும் பயந்து நடுங்கினர். கலை மணியை அழைத்துக் கொண்டு ஒரு மரத்தின் பின்னால் மறைந்து நின்று அவதானித்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. அங்கே குரங்குக் கூட்டம் ஒன்று வந்திருந்தது. மரக்கிளைகளில் அங்கும் இங்கும் பாய்ந்து குரங்குகள் விளையாடின. கொடிகளில் ஏறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துத் தூங்கி மற்றக் கொடிகளுக்கு மாறின. சில குரங்குகளின் வயிற்றை கட்டிப் பிடித்தபடி குரங்குக் குட்டிகள் இருந்தன.

கலை, கண்ணை மூடிக்கொண்டு நிலத்தில் படுத்த மணியை எழுப்பினான். "பயப்படாதே அவை பேய்கள் இல்லை குரங்குகள்" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை விழித்துப் பார்த்த மணி உண்மையை உணர்ந்து மகிழ்ச்சி அடைந்தான். இப்போ அவனுக்குத் துணிவு வந்துவிட்டது. மந்திரக்கிழவி குரங்குகளைத்தான் பேய்கள் ஊஞ்சல் ஆடுவதாகக் கூறி ஊரை ஏமாற்றி வந்துள்ளாள் என்றான்.

கலையும், மணியம் இன்னும் சிறிது தூரம் காட்டினுள் முன்னேறிச் சென்றனர். அங்கே ஒரு பெரிய கோழிக்கூடு இருப்பதைக் கண்டனர். கூட்டினுள் பல கோழிச்சேவல்கள் இருந்தன. இருவருக்கும் மீண்டும் பயம் பிடித்து விட்டது. நடுக்காட்டில் யாராவது கோழி வளர்ப்பார்களா? என்று எண்ணியபடி அதிசயத்துடன் நின்றனர். இது பேய்களின் வேலையாக இருக்குமோ...?

மணி... மணி... "அதோ அவ்விடத்தில் புகை தெரிகின்றது" என்றான் கலை. இருவரும் மெள்ள மெள்ள அவ்விடத்தை நோக்கி நகர்ந்தனர்.

என்ன ஆச்சரியம்... மர்மம் துலங்கி விட்டது. மந்திரக்கிழவி அவ்விடத்தில் உணவு சமைத்துக்-கொண்டிருந்தாள். அவளுக்கு எதிரே பெரிய பாத்திரத்தில் கோழி இறைச்சிகள் பெரிய,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டுகளாகப் பொரித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை அவள் ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

பேய்களுக்குப் பூசை செய்வதாகக் கூறிக் கொண்டு காட்டினுள் வரும் மந்திரக்கிழவி கோழிகளை அடைத்து வைத்து ஒவ்வொரு நாளும் வந்து கோழிகளைச் சமைத்து உண்ணுகின்றாள் என்பது அவர்களுக்கு நன்றாக விளங்கிவிட்டது.

அவர்கள் ஓசையின்றி மெதுவாக அவ்விடத்தைவிட்டுப் பின்வாங்கினர். மரஇலைகளை பறித்துப் போட்டபடி மணி அவதானமாக பின்வாங்கினான். அவ்விடத்தை மீண்டும் வந்தடைய அந்த இலைகள் உதவியாக இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும்.

காட்டைத் தாண்டி வயல்வெளியை அடைந்ததும் வேகமாக கிராமத்தை நோக்கி ஓடினர். தாம் கண்டவற்றையும் மந்திரக்-கிழவியின்போலி வேடத்தையும் மக்களிடம் கூறினர். அவர்கள் கலை, மணி இருவரது துணிவையும் பாராட்டினர். உடனடியாகத் தடிகளுடனும் கத்திகளுடனும் துணையான் கல் பகுதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி ஓடினர். கலையும் மணியும் காட்டிய இடத்தை முற்றுகையிட்டனர். கிழவி கையும் களவுமாக பிடிபட்டாள்.

அவ்விடத்தில் "கஞ்சாப்" பயிரும் பெருமளவில் பயிரிடப்பட்டுள்ளதையும் மக்கள் கண்டனர். அவற்றைத் தீயிட்டு அழித்தனர். கோழிக் கூட்டினையும் திறந்துவிட்டனர். கோழிகள் காட்டினுள் ஓடித்தப்பின.

கிழவி குற்றத்தை ஒப்புக்கொண்டாள். உயிர்ப்பிச்சை தருமாறு மன்றாடினாள். ஊர் மக்கள் அவளை மன்னித்தனர்.

அவர்கள் எல்லோரும் சேர்ந்து பணத்தைச் சேகரித்து அவளுக்குக் கொடுத்தனர். அன்றிலிருந்து கிழவி சுயமாகத் தொழில் செய்யத் தொடங்கினாள். அவள் வடை சுட்டு விற்று அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் சந்தோசமாக வாழ்ந்து வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பாழ்ங்கிணறு

அந்த ஊரின் பிரதான வீதி ஓரமாகப் பழைமை வாய்ந்த கிணறு ஒன்று இருந்தது. அக்கிணறு ஒரு காலமும் வற்றியதில்லை. குடிநீர்ப் பஞ்சம் ஏற்படும் காலங்களில் எல்லாம் பக்கத்துக் கிராம மக்களும் அக்கிணற்றின் நீரைத்தான் நம்பி வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் இரவில் திருடர்கள் இருவர் தாம் திருடிய தங்க ஆபரண மூடையுடன் அவ்வழியாக வந்து கொண்டிருந்தனர். அவ்வேளையில் காற்று மிகவும் கடுமையாக வீசியது. மழையும் விடாது பெய்தது. எங்கும் இருள்மயம்... இரண்டு திருடர்களும் மிகவும் அவதானமாகக் கிணற்றடிக்கு வந்து சேர்வதற்கும், பொலிஸ் வண்டியொன்று வருவதற்கும் சரியாக இருந்தது. செய்வதறியாத திருடர்கள் நகை மூட்டையைக் கிணற்றில் போட்டுவிட்டு மறைந்து நின்றனர்.

பொலிஸ்வண்டி வேறு பக்கமாகச் சென்றுவிட்டது இருவரும் வெளியே வந்து நகை மூடையை எடுக்க முயற்சித்த வேளையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைப் பறித்து மின்னல் ஒன்று மின்னித்-தாக்கியது.

ஐயோ... அம்மா... இடியேறு இருவரையும் தாக்கிவிட்டது. அவர்கள் இருவரும் உயிர்தப்பவில்லை.

மறுநாள் அவ்விடம் வந்த மக்கள் பிணங்களைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். சிலர் இது பேய் அடித்ததால் ஏற்பட்ட மரணம் என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிலிருந்து அக்கிணற்றடிக்குச் செல்வதற்கு மக்கள் அஞ்சினர். காலப்போக்கில் அந்தக் கிணறு பாழ்ங்கிணறாக மாறியது. அழுக்குகளால் நிறைந்து கிடந்தது. கம்புகள், மட்டைகள், குப்பைகள் போன்றன அக்கிணற்றில் கிடந்தன.

இராட்சதப் பேரலைகளின் தாக்கத்தினால் அழிவடைந்த கடற்கரையோர மக்களின் புனர்வாழ்விற்கு உதவுவதற்கு இனமத பேதங்களைக் கருத்திற் கொள்ளாது... இலங்கை மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் உதவ முன்வந்த வேளையில், மலைநாட்டிலிருந்து காமினியின் தலைமையில் பதினைந்து மாணவர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு அப்பிரதேசத்திற்கு வந்தனர்.

மக்களின் பிரதான தேவைகளில் ஒன்றாக குடிநீர்ப் பிரச்சினை காணப்படுவதனை அவர்கள் உணர்ந்தனர். கடற்கரையோரக் கிணறுகள் பலவும் அழிக்கப்பட்டிருந்தன. எஞ்சிய கிணற்றுநீர் உப்புத் தன்மையாக மாறி இருந்தது.

எப்படியாவது சிறந்த குடிநீரை அப்பகுதி மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.... என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம் என எண்ணிய வண்ணம் பக்கத்துக் கிராமத்திற்குச் சென்றனர்.

அங்கே இருந்த முதியவர் ஒருவர் இந்தப் பாழ்ங்கிணறு வற்றாத நீர் ஊற்றைக் கொண்டதெனவும் மக்களின் மூடநம்பிக்கையால் தற்போது பாழடைந்து விட்டதாகவும் கூறினார்.

காமினி குழுவினர் கிணற்றை இறைத்துத் தூய நீரை மக்களுக்குக் கொடுப்பதென முடிவு செய்தனர். அங்கு செயற்பட்ட வெளிநாட்டிலிருந்து வந்திருந்த அரச சார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் அவர்கள் கிணற்றை இறைத்துத் துப்பரவு செய்தனர்.

Donated by ... Children in Sri Lanka

அச்சத்துடன் தூரத்தில் வந்து நின்று பார்த்துக் கொண்டிந்த கிராம மக்களும் சிறுவர்களின் முயற்சியைப் பாராட்டி அவர்களுக்கு உதவிபுரிய முன்வந்தனர்.

கிணறு முற்றாக இறைக்கப்பட்டதும் காமினியும் முஸ்தபாவும் கிணற்றினுள் இறங்க முன்வந்தனர். கண்ணனும் நண்பர்களும் கயிற்றின் உதவியுடன் அவர்களை மெதுவாகக் கிணற்றினுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கினர். அவர்கள் கிணற்றின் அடியை அகழ்ந்த வேளையில் மூடையொன்று அகப்பட்டது. அதனைஎடுத்துக் கயிற்றில் கட்டினர். வெளியில் நின்ற நண்பர்கள் அதனை வெளியே இழுத்து எடுத்தனர்.

என்ன ஆச்சரியம்... அதனுள் இருந்த அத்தனையும் தங்க ஆபரணங்கள்

கிணற்றில் இருந்து இப்போ ஊற்றுக்கண் வழியாக நீர் குமுறிப் பாய்ந்தது. நண்பர்கள் காமினியையும் முஸ்தபாவையும் விரைவாகக் கிணற்றிலீருந்து கயிற்றின் உதவியுடன் வெளியே தூக்கி எடுத்தனர்.

எல்லோருக்கும் பாழ்ங்கிணற்றின் மர்மம் துலங்கி விட்டது. அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். காமினி குழுவினரை மக்கள் பாராட்டினர்.

சுத்திகரிக்கப்பட்ட நீர் அங்கிருந்து பக்கத்துக் கிராமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. மக்களின் குடிநீர்ப் பிரச்சினையும் தீர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. காட்டில் கலகலப்பு

அந்தக் காட்டில் இருக்கும் மரஞ்செடி கொடிகள், பறவைகள், மிருகங்கள் மற்றும் அனைத்து உயிரினங்களும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அவை ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்து சண்டை பிடிக்காது அன்பாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து வந்தன.

இதற்குக் காரணம் மரங்கள்தான். மரங்கள் திருடுவதில்லை. பொய் பேசுவதில்லை. மற்றவர்களுக்குத் துன்பம் செய்வதில்லை. மிகவும் பொறுமையாகவும் மௌனமாகவும் இருந்து மற்றைய உயிரினங்களைப் பாதுகாத்து வளர்த்து வந்தன.

யானைகள் கூட்டம் கூட்டமாக அங்கே வந்தன, மரக்கிளைகளைத் தும்பிக் கையால் இழுத்து வளைத்து முறித்துத் தின்று பசியாறின. மரத்தின் பட்டைகளை உரித்தும் தின்றன. மரம் அவற்றை எல்லாம் சகித்துக் கொண்டிருந்தது.

பறவைகளும் வந்தன மரக்கிளைகளில் கூடுகளைக் கட்டின. பழங்களை உண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களின் மீது எச்சமிட்டன. மரம் அவற்றை வெறுக்கவில்லை.

தேனீக்களும் வந்தன. வண்ணத்துப் பூச்சிகளும் வந்தன. பூக்களைச் சிதைத்தன. தேனை உண்டன. அங்குமிங்கும் ஆடிப்பாடி மகிழ்ந்தன. தேனீக்கள் மரக்கிளைகளிலும் மரப் பொந்துகளிலும் கூடுகளை அமைத்தன. வண்ணத்துப் பூச்சிகள் துளிர்த்து வரும் மெல்லிய இலைகளில் தமது முட்டைகளை இட்டன. மரம் அவற்றை எல்லாம் பாதுகாத்து மிகவும் மகிழ்ச்சியுடன் வாழவைத்தது.

மாடுகள், ஆடுகள், மான்கள் எல்லாம் வந்தன. மரங்களின் அடியில் படுத்து உறங்கின. மரங்களின் அடியில் தமது உடலைத் தேய்த்தன. அவற்றின் உடலில் இருந்த உண்ணிகளையும் பேன்களையும் மரப்பட்டைகள் அகற்றிவிட்டன. குரங்குகள் வந்தன. கிளைகளில் தாவிப்பாய்ந்தன. பூக்களும், பிஞ்சுகளும் சிதறிவிழுந்தன. குரங்குகளையும் மரங்கள் ஆதரித்தன.

சிறிது காலம் சென்றபின் காட்டில் மழைபெய்வது குறையத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்த குளங்களும் வற்றிவிட்டன. மரங்களுக்கு நீர் கிடைக்கவில்லை. அவை வாடத்தொடங்கின. பறவைகள் தூர இடங்களுக்குப் பறந்து சென்று நீர் அருந்திவிட்டுத் திரும்பி வந்து மரங்களில் அமர்ந்தன. மிருகங்களும் தூர இடங்களுக்குச் சென்று நீரைக் குடித்துவிட்டு வந்தன.

மரம் எங்கும் செல்ல முடியாத காரணத்தால் அதற்கு நீர் கிடைப்பது கஸ்டமாக இருந்தது. தனது வேர்களை இன்னும் ஆழத்திற்கு மரங்கள் செலுத்தின. கொஞ்சம் நீர் கிடைத்தது. அந்த நீர் மரங்களுக்கு போதுமானதாக இருக்கவில்லை. மேலும் மேலும் வரட்சி அதிகரித்ததால் மரங்கள் எல்லாம் சோர்ந்து போய்விட்டன. அவற்றின் இலைகள் காய்ந்து விழத்தொடங்கின.

இதனால் பறவைகள் தமது குஞ்சுகளையும் அழைத்துக் கொண்டு வளமான இடத்திற்குப் பறந்து சென்றுவிட்டன. வண்ணத்துப் பூச்சிகளும், தேனீக்களும் கூட அங்கு இப்போ வருவதில்லை.

மரங்கள் இலைகளை எல்லாம் உதிர்த்துவிட்டு நின்றன. வறிய பிச்சைக்-காரனைப்போல் அவை தென்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் பறவைகளும், மிருகங்களும் ஏனைய உயிரினங்களும் அந்தக் காட்டில் உள்ள மரங்களை வெறுத்தன.

“நாங்கள் உங்களை நம்பி வாழ்ந்து வந்தோம்.... நீங்கள் எங்களை ஏமாற்றிவிட்டீர்கள்” என அவை மரங்களைப் பார்த்துக் கூறின. மரங்கள் எதுவுமே பேசவில்லை. அவை நம்பிக்கையுடன் இருந்தன. மழையை எதிர்பார்த்துக் காத்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களின் நம்பிக்கை வீண்போகவில்லை. ஒருநாள் இரவு மின்னல் பளீர பளீர என மின்னியது. இடியும் இடித்து முழங்கியது. வானத்தில் நட்சத்திரங்கள் எல்லாம் மறைந்துவிட்டன. பெரிய மழைவிடாது பெய்தது. விடிய விடியப் பெய்தது. குளங்களும் மடுக்களும் நீரால் நிரம்பின. மரஞ்செடி கொடிகள் மகிழ்ந்து துளிர்த்தன. புற்கள் வளர்ந்து தரையை மூடின. எங்கும் பச்சைப் பசேல் என்று கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. மரங்கள் முன்பு இருந்த நிலைக்கு வந்துவிட்டன. பூக்கள் பூத்துக் குலுங்கின.

வாசனையைக் காற்றில் கலந்து மரங்கள் பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் மற்றும் அனைத்து உயிரினங்களுக்கும் அழைப்பு விடுத்தன.

“நாங்கள் இப்பொழுது மிகவும் நன்றாக இருக்கின்றோம். செழிப்பாக இருக்கின்றோம். நீங்கள் அனைவரும் திரும்பி வாருங்கள். மரங்களின் அழைப்பை காற்றுக் கூறியது. எல்லா உயிரினங்-களும் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தன. மரங்கள் அவற்றை வரவேற்று உபசரித்தன. காட்டில் மீண்டும் கலகலப்பு ஏற்பட்டது... எங்கும் மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donated by Save the
Children in Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சூழலில் அவசியம் தேவைப்படுகின்ற,
இன்று அருகிப் போயுள்ள -
மனித விழுமியங்களுள் சில,
குறிப்பாக "பிறருக்கு உதவி செய்தல்"
என்பது இத் தொகுப்பில் உள்ள
அனைத்து கதைகளினதும்
அடிநாதமாக ஒலிப்பது
பாராட்டிற்குரியது.

அனைத்துக் கதைகளும்
பிறரது தொகுப்புக்கள் போன்று
ஒரே விதமான பாணியிலமையாது
வெவ்வேறுபட்டமைந்து
புதிய புதிய சுவையினை
தருகின்றமை இத்தொகுப்பின்
பிறிதொரு சிறப்பாகின்றது.

கலாநிதி. செ. யோகராசா
மொழித்துறை கிழக்குப் பல்கலைக்கழகம்

ISBN: 955 - 99505 - 2 - 5

Golden - Kalmunai. 067-2223939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org